தியாகி இமானுவேல் சேகரன் குருபூஜை

திமுகவினர் மாலை அணிவித்து மரியாதை

▶ ராஜபாளையத்தில் தியாகி இமானுவேல் சேகரன் சிலைக்கு தங்கப்பாண்டியன் எம்எல்ஏ, நகர்மன்ற தலைவர் பவித்ரா ஷியாம், ஒன்றிய சேர்மன் சிங்கராஜ் உள்ளிட்டோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். அடுத்த படம்:திருத்தங்கல்லில் இமானுவேல் சேகரன் படத்திற்கு திமுக மாநகர செயலாளர் எஸ்.ஏ.உதயசூரியன் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.கடைசி படம்: காரியாபட்டியில் இமானுவேல் சேகரன் படத்திற்கு பேரூராட்சி தலைவர் செந்தில் மரியாதை செலுத்தினார்.

ராஜபாளையம், செப்.12: தியாகி இமானுவேல் சேகரன் குருபூஜையை முன்னிட்டு ராஜபாளையம் அம்மன் பொட்டல் தெருவிலுள்ள சிலைக்கு சட்டமன்ற உறுப்பினர் தங்கப்பாண்டியன், நகராட்சி சேர்மன் பவித்ராஷியாம், ஒன்றிய சேர்மன் சிங்கராஜ் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

இந்நிகழ்ச்சியில் நகர செயலாளர்கள் ராமமூர்த்தி, மணிகண்டராஜா, சேத்தூர் சேர்மன் பாலசுப்பிரமணியன், துணை சேர்மன்கள் துரைகற்பகராஜ், கல்பனாகுழந்தைவேலு, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் வேல்முருகன், ஒன்றிய நகர பேரூர் கழகநிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், ஊர் நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

சிவகாசி: சிவகாசி மாநகர் திருத்தங்கல் முருகன் காலனியில் வைக்கப்பட்டிருந்த தியாகி இமானுவேல் சேகரன் படத்திற்கு திமுக மாநகர செயலாளர் எஸ்.ஏ.உதயசூரியன் மலர் தூவி மரியாதை செலுத்தினார். நிகழ்ச்சியில் பகுதி கழகச் செயலாளர்கள் காளிராஜன், மாநகராட்சி கவுன்சிலர் பாக்கியலட்சுமி மற்றும் திமுக சார்பு அணி நிர்வாகிகள கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை திமுக கவுன்சிலர் ஞானரஞ்சித்ராஜா செய்திருந்தார்.

▶ அருப்புக்கோட்டையில் முன்னாள் நகர்மன்ற தலைவர் சிவப்பிரகாசம் மரியாதை செலுத்தினார்.

காரியாபட்டி: காரியாபட்டியில் பேருந்து நிலையம் முன்பு இமானுவேல் சேகரன் படத்திற்கு திமுக சார்பாக பேரூராட்சி தலைவர் செந்தில், ஒன்றிய செயலாளர் செல்லம், பிரதிநிதி மெடிக்கோ ராஜேந்திரன் மற்றும் பேரூராட்சி கவுன்சிலர்கள் சரஸ்வதி பாண்டியன், ஜெய்சங்கர், வார்டு செயலாளர் கருப்பையா உள்ளிட்டோர் மாலை அணிவித்து மரியாதை செய்தனர்.

அருப்புக்கோட்டை: அருப்புக்கோட்டையில் இமானுவேல் சேகரன் படத்திற்கு முன்னாள் நகர்மன்ற தலைவர் சிவப்பிரகாசம், தலைமையில் மாவட்ட திமுக ஆதிதிராவிடர் அணி அமைப்பாளர் சோலையப்பன், நகர திமுக துணை செயலாளர் ஆசைத்தம்பி, தமிழக மக்கள் முன்னேற்ற கழக மாவட்ட இணைச்செயலாளர் தவமணி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

சாத்தூர்: சாத்தூர் மதுரை பேருந்து நிறுத்தம் அருகே இமானுவேல் சேகரன் படத்திற்கு மதிமுக சார்பில் சட்டமன்ற உறுப்பினர் ரகுராமன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் மதிமுக நகர செயலாளர் மற்றும் நகர் மன்ற உறுப்பினர் கணேஷ்குமார், மாவட்ட பொருளாளர் குணசேகர், மாநில செயற்குழு உறுப்பினர் பாலகிருஷ்ணன், பொதுக்குழு உறுப்பினர் ராஜேந்திரன், சிந்தப்பள்ளி ஊராட்சி தலைவர் சௌந்தர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

புகையிலை பொருட்கள் விற்ற 251 கடைகள் சீல்

விருதுநகர், செப்.12: விருதுநகர் மாவட்டத்தில் புகையிலை விற்ற 251 கடைகளுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளது.

விருதுநகர் மாவட்ட நிர்வாகம் வெளியிட்ட தகவல்: மாவட்டத்தில் தடை செய்யப்பட்ட போதை பொருட்கள் ஒழப்பு திட்டத்தின் படி பள்ளி, கல்லூரிகளுக்கு அருகில் உள்ள கடைகள், இதர பகுதி கடைகளில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகிறது.

மாவட்டத்தில் கடந்த 1.1.2024 முதல் 31.8.2024 வரை நடத்தப்பட்ட ஆய்வில் 251 கடைகள், 28 வாகனங்களில் 1,183 கிலோ புகையிலை பொருட்கள் கைப்பற்றப்பட்டன. 251 கடைகளுக்கு சீல் வைக்கப்பட்டது. 251 கடைகள், 28 வாகனங்களுக்கும் ரூ.65.10 லட்சம் அபராதம் விதிக்கப்பட்டது. கடந்த 1.9.2024 முதல் 7.9.2024 வரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் 9 கடைகள், ஒரு வாகனத்தில் இருந்து 23 கிலோ புகையிலை பொருட்கள் கைப்பற்றப்பட்டு, ரூ.2.50 லட்சம் அபராதம் விதிக்கப்பட்டது.

புகையிலை விற்பனை கண்டுபிடிக்கப்பட்டால் முதல் முறை ரூ.25 ஆயிரம் அபராதம் 15 நாட்கள் கடை மூடி சீல் வைக்கப்படும். 2வது முறை தவறு செய்தால் ரூ.50 ஆயிரம், ஒரு மாதம் கடை மூடி சீல், 3ம் முறை தவறு செய்தால் ரூ.1 லட்சம் அபராதமும் 3 மாத கடை மூடி சீல் வைக்கப்படும் என தெரிவித்துள்ளார்.

மனைவிக்கு மிரட்டல் கணவர் மீது வழக்கு

சிவகாசி, செப்.12: சிவகாசி - கட்டளைப்பட்டி ரோட்டை சேர்ந்தவர் அழகர்சாமி. இவரது மனைவி உமாதேவி(27). இருவருக்கும் அடிக்கடி குடும்ப தகராறு ஏற்பட்டு வந்தது. கடந்த சில நாட்களுக்கு முன்பு உமாதேவியின் மீது சந்தேகம் அடைந்த அழகர்சாமி யாரிடமும் போனில் பேசக்கூடாது என்று கூறி தகராறு செய்துள்ளார். இதனால் மனமுடைந்த உமாதேவி எம்.புதுப்பட்டி அருகே தாழைப்பட்டியில் உள்ள தனது தாய் வீட்டிற்கு சென்று விட்டார். அங்கு சென்ற அழகர்சாமி, உள்ளிட்டோர் உமாதேவியிடம் தகராறு செய்து அவரை கத்தியால் தாக்கினர். எம்.புதுப்பட்டி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், சாத்தூர்

அதிமுஅ 7/89/24

க.துரைராஜ், த/பெ.கந்தசாமி, 53, தொம்பக்குளம், கீழ இராஜகுலராமன், வெம்பக்கோட்டை வட்டம், விருதுநகர் மாவட்டம். ...மனுதாரர்

வட்டாட்சியர், வெம்பக்கோட்டை ...எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி நம்பரில் மனுதாரர் தனது தாய் க.சீனியம்மாள் என்பவர் கடந்த 25.07.2006ம் தேதியன்று மேற்படி முகவரியில் உள்ள வீட்டில் இறந்ததை எதிர்மனுதாரர் அலுவலக இறப்பு பதிவேட்டில் பதிவு செய்யக்கோரி மேற்படி வருவாய் கோட்டாட்சியர் சமூக நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளார். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் 15 தினங்களுக்குள் சமூக நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளலாம். தவறும் பட்சத்தில் ஒரு தலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என அறிவிக்கப்படுகிறது.

க.துரைராஜ்
53, தொம்பக்குளம்,
கீழராஜகுலராமன்

சாலையை சேதப்படுத்திய நபருக்கு அபராதம் விதிப்பு

சிவகாசி, செப்.12: சிவகாசி வேலாயுதம் சாலையில் வசித்து வரும் சொக்கநாத பாண்டியன் கழிவுநீர் தொட்டி அமைக்க முடிவு செய்து அதற்காக வீட்டின் அருகில் உள்ள சாலையில் ராட்சத பள்ளம் தோண்டி உள்ளார். இதனால் அந்த பகுதியில் அமைக்கப்பட்டிருந்த சாலையின் ஒரு பகுதி சேதம் அடைந்தது. இது குறித்து தகவல் அறிந்த மாநகராட்சி அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு சென்று ஆய்வு செய்தனர். இதில் சொக்கநாதபாண்டியன் வீட்டின் முன்பு மாநகராட்சி நிர்வாகத்திடம் உரிய அனுமதி பெறாமல் பள்ளம் தோண்டப்பட்டிருந்தது தெரியவந்தது. அதனை தொடர்ந்து அவருக்கு ரூ.15 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டது.

75வது ஆண்டு பவளவிழாவை முன்னிட்டு

இல்லந்தோறும் திமுக கொடி ஏற்ற வேண்டும்

▶ அருப்புக்கோட்டையில் நடைபெற்ற திமுக பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன் பேசினார்.

அருப்புக்கோட்டை, செப்.12: திமுக 75வது ஆண்டு பவள விழாவை முன்னிட்டு இல்லம் தோறும் திமுக கொடி ஏற்ற வேண்டும் என அருப்புக்கோட்டையில் நடைபெற்ற திமுக உறுப்பினர்கள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அருப்புக்கோட்டை நகர திமுக சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் தனியார் திருமண மண்டபத்தில் நடந்தது.

கூட்டத்திற்கு வருவாய் துறை அமைச்சரும் தெற்கு மாவட்ட திமுக செயலாளருமான சாத்தூர் ராமச்சந்திரன் தலைமை வகித்து சிறப்புரையாற்றினார். இந்த கூட்டத்தில் திமுக உருவாகி 75வது ஆண்டு பவள விழாவை முன்னிட்டு திமுக தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் ஆணையின்படியும், தெற்கு மாவட்ட திமுக செயலாளரும் அமைச்சருமான சாத்தூர் ராமச்சந்திரன் அறிவுறுத்தல்படியும் நகரில் உள்ள அனைத்து

போது உறுப்பினர்கள் கூட்டத்தில் தீர்மானம்

வார்டுகளிலும், திமுக தொண்டர்கள் இல்லம் தோறும் திமுக கொடி ஏற்ற வேண்டும். வருகிற செப்.15ம் தேதி அண்ணா பிறந்தநாளை சிறப்பாக கொண்டாட வேண்டும். 17ம் தேதி சென்னையில் நடைபெறும் திமுக முப்பெரும் விழாவில் திரளாக கலந்து கொள்வது. திமுக தலைமை கழகம் விருதுநகர் மாவட்ட திமுக வழியில் தேர்தல் வியூகத்தின் அடிப்படையில் குழு அமைத்து வரும் சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளரை பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்ய வைப்பது என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் முன்னாள் ஒன்றிய சேர்மன் சுப்பாராஜ், முன்னாள் நகர்மன்ற தலைவர் சிவப்பிரகாசம், நகர திமுக செயலாளர் ஏகே மணி, நகர அவைத் தலைவர் ராமசாமிபுரம் கணேசன், நகர்மன்ற துணைத் தலைவர் பழனிச்சாமி, வடக்கு ஒன்றிய செயலாளர் பொன்ராஜ், தெற்கு ஒன்றிய செயலாளர் பாலகணேசன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பாபுஜி, மாவட்ட ஆதிதிராவிடர் அணி அமைப்பாளர் சோலையப்பன், மாவட்ட இலக்கிய அணி பொன் முத்துராமலிங்கம், முன்னாள் மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் திருத்தணி முருகன், மாவட்ட பிரதிநிதிகள் சிவசங்கரன், அன்பழகன், கண்ணன் நகர துணைச் செயலாளர்கள் ஆசைத்தம்பி, கார்த்திகேயன், பொருளாளர் பெரியசாமி, கவுன்சிலர்கள் கண்ணன், சிவகாமி, ஜெயகவிதா, கலைவாணி, சங்கீதா, தமிழ் காந்தன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

ஆக்கிரமிப்புகளால் அவலம்

அனுப்பன்குளம் ஊராட்சியில் ஊரணி மாயம்

கண்டுபிடித்து தர கிராமமக்கள் கோரிக்கை

சிவகாசி, செப்.12: சிவகாசி ஒன்றியம் அனுப்பன்குளம் ஊராட்சியில் மாயமான ஊரணியை கண்டுபிடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என்று கிராம மக்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

நீர்நிலைகள் பாதுகாக்கப்பட வேண்டியதன் தேவையை உயர் நீதிமன்றம் தொடங்கி ஐ.நா. அமைப்பு வரை வலியுறுத்தி வருகின்றன. நீர்நிலைகள் பாதுகாக்கப்படவில்லை என்றால் விவசாயமும், குடிநீர் ஆதாரங்களும் முற்றிலுமாக அழிந்து விடும். இதை உணர்ந்து ஆக்கிரமிக்கப்பட்ட நீர்நிலைகளை மீட்கவும், மீதமுள்ள நீர்நிலைகளை பாதுகாக்கவும் தமிழக அரசு தீவிரமாக நடவடிக்கை எடுத்து வருகின்றது. இந்நிலையில் சிவகாசி அருகே உள்ள அனுப்பன்குளம் ஊராட்சியில் மாயமான ஊரணியை கண்டுபிடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என்று கிராம மக்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

அனுப்பன்குளம் ஊராட்சியில் ஏராளமான நீர் நிலைகள் தனியாரின் பிடியில் உள்ளன. இந்த ஊராட்சியில் ஆக்கிரமிப்புகளை அகற்றி அனைத்து நீர் நிலைகளையும் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என்று கிராம மக்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். ஆக்கிரமிப்பு ஊரணியை மீட்க வேண்டும் என்று ஊராட்சி மன்ற தலைவர் கவிதா பாண்டியராஜன் தொடர்ந்து கடந்த ஐந்து வருடமாக மனு கொடுத்தும் எந்தவித நடவடிக்கையும் இல்லாமல் உள்ளது. இந்த நிலையில் அனுப்பன்குளம் ஊராட்சியில் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு மையம் அருகில் சுமார் இரண்டு ஏக்கர் அளவில் மிகப்பெரிய ஊரணி உள்ளது. இந்த ஊரணியை சிலர் டன் கணக்கில் மண் போட்டு மெத்தி சொந்த பயன்பாட்டிற்கு பயன்படுத்தி வருகின்றனர்.

இதனால் பருவமழை காலங்களில் சிவகாசியில் இருந்து வரும் வெள்ளநீர் திசை மாறி வயல்வெளிகளிலும் கட்டிடங்களிலும் வெளியேறி வீணாகின்றது. இவ்வளவு பெரிய ஊரணியை ஆக்கிரமிப்பு செய்யும் அளவிற்கு அதிகாரிகள் அலட்சியமாக இருப்பதும் அது குறித்து தெரிந்தும் கண்டும் காணாதது போல் இருப்பதும் அந்தப் பகுதி கிராம மக்கள் இடையே அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது. பருவமழை காலங்களில் கடந்த ஆண்டு சிவகாசியை சுற்றி ஏராளமான நீர் நிலைகள் நிறைந்த போதிலும் அனுப்பன்குளம் ஊராட்சியில் உள்ள கண்மாய் வறண்டு காணப்படுகிறது. அனுப்பன்குளம் ஊராட்சியில் நீர்நிலைகளுக்கான அச்சுறுத்தல் அதிகரித்து வரும் நிலையில் சம்பந்தப்பட்ட ஊரணியை மீட்க அரசு அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கிராம மக்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர்.

அனுப்பன்குளம் ஊராட்சி மன்ற தலைவர் கவிதாபாண்டியராஜன் கூறும் போது, ஊரணி ஆக்கிரமிப்புகளை அகற்ற நான் முயற்சி எடுத்த போது சிலர் கொலை மிரட்டல் விடுக்கின்றனர். சம்பந்தப்பட்ட ஊருணி ஆக்கிரமிப்புகளை எடுக்கக் கூடாது என்று முன்னாள் அதிமுக அமைச்சர்கள் 3 பேர் பேசினர். நான் தொடர்ந்து முயற்சி எடுத்த போதிலும் தற்போது என் மீது மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் பொய்யான புகாரும் கொடுக்கின்றனர். எங்கள் ஊர் ஊருணியை மீட்கும்வரை தொடர்ந்து போராடுவேன் என்றார்.

▶ அனுப்பன்குளம் ஊராட்சியில் மண் கொட்டப்பட்டு அடையாளம் தெரியாமல் மாறிப் போன ஊரணி.

காமராஜ் பொறியியல் கல்லூரியில் புதிய மாணவர்கள் அறிமுக விழா

▶ விருதுநகர் காமராஜ் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப கல்லூரியில் நடந்த முதலாம் ஆண்டு மாணவர்கள் அறிமுக விழாவில் தொலைக்காட்சி நிகழ்ச்சி தொகுப்பாளர் கோபிநாத் பேசினார்.

விருதுநகர், செப்.12: விருதுநகர் காமராஜ் பொறியியல் கல்லூரியில் முதலாம் ஆண்டு மாணவர்கள் அறிமுக விழா நேற்று நடைபெற்றது. கல்லூரி செயலாளர் தர்மராஜன் தலைமை வகித்து முதலாம் ஆண்டு மாணவர்கள், அவர்களின் பெற்றோரை வரவேற்றார்.

விழாவில் தனியார் டிவி தொகுப்பாளர் கோபிநாத் பேசுகையில், மாணவர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்கான குறிக்கோளை தேர்வு செய்து கொள்ள வேண்டும். அடுத்தவர்கள் நம்மை பற்றி என்ன மதிப்பிடுவார்கள் என யோசித்து செய்ய வேண்டியதை செய்யாமல் இருக்க கூடாது. நீங்கள் என்ன செய்ய போகிறீர்கள் என்பதை இந்த சமூகம் உற்று நோக்கி கொண்டிருக்கிறது என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். கல்வி வெறுமையான பாடத்திட்டம் மட்டும் கிடையாது. முந்தைய தலைமுறைக்கு மறுக்கப்பட்ட நீதியை இன்றைய தலைமுறைக்கு பெற்றுத் தந்ததே இந்த கல்விதான் என்பதை உணர வேண்டும். ஒரு செயலில் தோல்வி கிடைத்தாலும் பரவாயில்லை. அதை முயற்சிக்காமல் மட்டும் இருந்து விடக்கூடாது என்றார். கல்லூரி முதல்வர் செந்தில் நன்றி தெரிவித்தார். நிகழ்வில் துணைத் தலைவர் பாலகிருஷ்ணன், துணைச் செயலாளர் முருகன், பொருளாளர் ஸ்ரீமுருகன் உள்பட பலர் பங்கேற்றனர்.

டாடா கேபிடல் லிமிடெட்

பதிவு அலுவலகம்: 11ஆவது தளம், டவர்–A, பெனிகேலா பிஸ்னெஸ் பார்க், கண்பத் ராவ் கடம் மார்க், லோவர் பரேல், மும்பை–400013. கிளை அலுவலகம்: 2ஆவது & 3ஆவது தளம், சாஜை மால், கதவு எண்.79, டி.எஸ்.எண்.873/2, பி.டி.ராஜன் சாலை, பீபீகுளம், மதுரை, தமிழ்நாடு–625002.

அசையா சொத்து விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

(கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002 இன் விதி 8 (6) உடன் விதி 9(1) கீழ்)

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8 (6) மற்றும் விதி 9(1) உடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் அசையாச் சொத்துகள் விற்பனை மின்–ஏலம் அறிவிப்பு

கடன் கணக்கு எண்.21351614 மற்றும் TCFLA0480000011115212: திரு.செந்தில்குமார் N

டாடா கேபிட்டல் லிமிடெட் இதனை தெரிவிக்க விழைகிறது. (டிசில்) ஒரு வங்கி சாரா நிதி நிறுவனம், இது கம்பெனிகள் சட்டம், 1956ன் பிரிவுகளின் கீழ் உருவாகப்பட்டுள்ளது. அதன் பதிவு அலுவலகம் 11ஆவது தளம், டவர்–A, பெனிகேலா பிஸ்னெஸ் பார்க், கண்பத் ராவ் கடம் மார்க், லோவர் பரேல், மும்பை—00013 என்ற முகவரியில் செயல்படுகிறது. மற்றும் ஒரு கிளை அலுவலகத்துடன் இதர இடங்களில் தமிழ்நாட்டில் ("கிளை") அலுவலகங்கள் உள்ளன. கம்பெனிகள் சட்டம், 2013 (கூறப்பட்ட திட்டம்) பிரிவுகள் 230 முதல் 232 வரை அத்துடன் படிக்க பிரிவு 66 மற்றும் இதர பொருந்தக்கூடிய பிரிவுகளின் கீழ் டாடா கிளீன்டெக் கேப்பிட்டல் லிமிடெட் (டிசிசில்) மாற்றம் செய்பவராகவும் மற்றும் **டாடா கேப்பிட்டல் லிமிடெட் (டிசில்)** மாற்றத்துக்கான உரிமையை பெறுபவராகவும் 24.11.2023 தேதியிட்ட உத்தரவின் படி, டாடா கேப்பிட்டல் பைனான்சியல் சர்வீஸஸ் லிமிடெட் (டிஎச்எஃப்எல்எல்) இடையேயான ஏற்பாடு திட்டத்துக்கு மும்பை தேசிய கம்பெனி சட்ட தீர்ப்பாயம் அனுமதி அளித்துள்ளது. அதன் அடிப்படையில், டிசிஎஃப்எல்எல் மற்றும் டிசிசில் (மாற்றும் செய்யும் கம்பெனிகள்) அத்துடன் அதன் முயற்சிகளின் பேரில் நிதி ரீதியாக நிலையானதாக, அத்துடன் அனைத்து உடைமைகள், சொத்துகள், உரிமைகள், பலன்கள், வட்டி, கடமைகள், பொறுப்புகள், உத்தரவாதங்கள், உடன்படிக்கைகள், ஒப்பந்தங்கள், பத்திரங்கள் உள்ளிட்டவை 01.01.2024 முதல் டிசில் உடன் இணைக்கப்பட்டுள்ளது. கூறப்பட்ட உத்தரவு மற்றும் திட்டத்தை பின்பற்றும் வகையில், டிசிஎஃப்எல்எல் நிறுவனத்தால் செயலாக்கப்பட்ட அனைத்து வசதி ஆவணங்கள் மற்றும் அனைத்து நிலுவைகளைப் பொறுத்தவரை இதனைத் தொடர்ந்து விண்ணப்ப நிறுவனத்துக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. ஆகவே டிசிசில், அடிப்படையில் இருந்து அதே (கடன்தாரர்கள்/உ.ப—கடன்தாரர்கள்) உரிமையை பெறுகிறது.

இதன்மூலம் பொதுமக்களுக்குப் பொதுவாக மேலும் கீழ்க்காணும் கடன்தாரர் மற்றும்/ உ.ப—கடன்தாரர், ஆகியோருக்குக் குறிப்பிட்டு வழங்கப்படும் அறிவிப்பாவது **டாடா கேபிடல் லிமிடெட்** வசம் அடமானம் வைக்கப்பட்ட, சொத்து டாடா கேபிடல் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டுக்குக்கும் கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்தானது, "உள்ளது உள்ளவிடத்தில்" & "உள்ளது உள்ளவாறு" மேலும் "உதவிஏதாா" அடிப்படையில் 04 அக்டோபர் , 2024 நாளில் விற்பனை செய்யப்பட உள்ளது.

இவ்வாறாக கடனீட்டு சொத்தை விற்பனை செய்வதன் மூலம் கடன் நிலுவைகள் கைகொள்ளப்படஎள்ளது. இவ்வாறாக 10 செப்டம்பர் –2024 தேதிபடி கடன் கணக்கு எண்கள் 21351614 & TCFLA0480000011115212 படி கடன்தாரர்கள் மற்றும் உ.ப—கடன்தாரர்கள்/ஜாமின்தாரர்கள் (1) திரு.செந்தில்குமரன், த/பெ.N.நாகராஜன், எண்.3/330, P.எண்.184, மதுரை டீச்சர்ஸ் காலனி, அழகர்கோவில் மெயின்ரோடு, அப்பன் திருப்பதி அஞ்சல், மதுரை, தமிழ்நாடு–625301: தவிர முகவரி: மனை எண்.212, UDRS எண்.106/6, & 106/7 , மதுரை டீச்சர்ஸ் சிட்டி, மாத்தூர் கிராமம், மதுரை வடக்கு தாலுகா, மதுரை மாவட்டம், தமிழ்நாடு–625301 (2) திருமதி. A.அனுராதா, க/பெ. திரு.செந்தில்குமார், எண்.3/330, P.எண்.184, மதுரை டீச்சர்ஸ் காலனி, அழகர்கோவில் மெயின்ரோடு, அப்பன் திருப்பதி அஞ்சல், மதுரை, தமிழ்நாடு–62530 மற்றும் (3) M/s.திருப்பதி ஆர்ஸ் புரடெக்ட்ஸ், பிரதிநிதி அதன் உரிமையாளர் திரு.செந்தில் குமார் N, 211, நாயக்கர் புதுத்தெரு, மதுரை, தமிழ்நாடு –625001 ஆகியோரிடம் இருந்து நிலுவைத் தொகை ரூ.1,28,95,154.81(ரூபாய் ஒரு கோடியே இருப்பத்து எட்டு லட்சத்து தொண்ணூற்றி ஐந்தாயிரத்து நூற்றி ஐம்பத்தி நான்கு மற்றும் பைசா எண்பத்தி ஒன்று மட்டும்) பெற வேண்டியுள்ளது.

கூறப்பட்ட சொத்து விற்பனை செய்யப்படுவது எந்த ஒரு ஒத்திவைப்பு / விடுபடல் இன்றி இ–ஏல முறையில் 04ஆம் தேதி அக்டோபர், 2024 அன்று மதியம் 2.00 மணிக்கு டிசில்ல் நிறுவனத்தால் அதன் கிளை அலுவலகம் அமைந்துள்ள 2ஆவது & 3ஆவது தளம், சாஜை மால், கதவு எண்.79, டி.எஸ்.எண்.873/2, பி.டி.ராஜன் சாலை, பீபீகுளம், மதுரை, தமிழ்நாடு–625002 என்ற முகவரியில் விற்பனை செய்யப்படும்.

சொத்தை வாங்குவதற்கான மூடி முத்திரையிடப்பட்ட இ–ஏலத்துடன் முன் வைப்பு தொகைக்கான கேட்பு காசோலை டாடா கேப்பிடல் லிமிடெட்டின் அதிகாரப்பூர்வ அதிகாரயால் 03ஆம் தேதி அக்டோபர் ,2024 அன்று மாலை 5.00 மணி வரை பெறப்படும்.

கடனீட்டு சொத்தின் விவரங்கள்	சுவாதீன வகை ஆக்கப்பூர்வ/ கையக	நிர்ணய விலை (ரூ)	முன் வைப்புத் தொகை (ரூ)
சொத்து எண்.1: மதுரை மாவட்டம், மதுரை வடக்கு பதிவு மாவட்டம், தாமரைப்பாடி சார் பதிவு மாவட்டம், மதுரை வடக்கு தாலுகா, எண்.81, வெளியன்குன்றம் கிராமம், மாத்தூர் கிராமம் குடிசைப்பகுதி, பட்டா எண்.427, பழைய ஆர்.எஸ்.எண்.480/6 மற்றும் நிலம் அளவீடு 77 சென்ட்கள் உப பிரிவு அத்துடன் UDRS எண்.105/6, அளவீடு 0.31.0 ஏர்ஸ் இணைக்கப்பட்டு அத்துடன் வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்டுள்ளன. மதுரை டீச்சர்ஸ் சிட்டி என பெயரிடப்பட்டுள்ளது. மனை எண்.184, UDRS எண்.105/6 அளவீடு 2900 ச.அடி ஏர்ஸ் எல்லைகள்; வடக்கு–மனை எண்.173, கிழக்கு–மனை எண்.183, தெற்கு–25 அடி அகல கிழக்கு மேற்கு பொது சாலை மற்றும் மேற்கு–மனை எண்.185, எல்லைகளுக்குள் அளவீடு; கிழக்கு மேற்கு வடக்கில் 40 அடி, தெற்கில் 40 அடி, மற்றும் தெற்கு வடக்கு கிழக்கில் 60 அடி, மேற்கில் 60 அடி அனைத்தும் அளவீடு 2400 ச.அடி நிலம் மற்றும் நிலம் அளவீடு 500 ச.அடி பகுதி 25 ச.அடி தெற்கு பகுதி பொது பாதை வழிக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அனைத்தும் மொத்தம் 2900 ச.அடி =6 சென்ட்கள் 284 ச.அடி நிலம் உள்ளது.	கையக	Rs. 53,10,000/- (ரூபாய் ஐம்பத்தி மூன்று லட்சத்து பத்தாயிரம் மட்டும்)	Rs. 5,31,000/- (ரூபாய் ஐந்து லட்சத்து முப்பத்தி ஒன்றாயிரம் மட்டும்)
சொத்து எண்.2: மதுரை மாவட்டம், மதுரை வடக்கு பதிவு மாவட்டம், தாமரைப்பாடி சார் பதிவு மாவட்டம், மதுரை வடக்கு தாலுகா, எண்.81, வெளியன்குன்றம் கிராமம், மாத்தூர் கிராமம் குடிசைப்பகுதி, பட்டா எண்.427, பழைய ஆர்.எஸ்.எண்.480/6 மற்றும் நிலம் அளவீடு 56 சென்ட்கள் உப பிரிவு அத்துடன் UDRS எண்.106/6, அளவீடு 0.22.5 ஏர்ஸ், பழைய ஆர்எஸ்எண்.481/7, நிலம் அளவீடு 58 சென்ட்கள், உப பிரிவு அத்துடன் UDRS எண்.106/7, அளவீடு 0.23.5 பகுதி அனைத்தும் இணைக்கப்பட்டு அத்துடன் வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்டுள்ளன. மதுரை டீச்சர்ஸ் சிட்டி என பெயரிடப்பட்டுள்ளது. அதில் மனை எண்.212, UDRS எண்.106/6 & 108/7 அளவீடு 2063 ச.அடி எல்லைகள்; வடக்கு–25 அடி அகல கிழக்கு மேற்கு பொது சாலை, கிழக்கு–மனை எண்.213, தெற்கு–மனை எண்.231 மற்றும் மேற்கு–மனை எண்.211, எல்லைகளுக்குள் அளவீடு; கிழக்கு மேற்கு வடக்கில் 33 அடி, தெற்கில் 33 அடி, மற்றும் தெற்கு வடக்கு கிழக்கில் 50 அடி, மேற்கில் 50 அடி அனைத்தும் அளவீடு 1650 ச.அடி நிலம் மற்றும் நிலம் அளவீடு 413 ச.அடி பகுதி 25 ச.அடி தெற்கு பகுதி பொது பாதை வழிக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அனைத்தும் மொத்தம் 2063 ச.அடி =4 சென்ட்கள் 319 ச.அடி நிலம் உள்ளது.	கையக	Rs.44,63,100/- (ரூபாய் நாற்பத்தி நான்கு லட்சத்து அறுபத்தி மூன்றாயிரத்து நூறு மட்டும்)	Rs.4,46,310/- (ரூபாய் நான்கு லட்சத்து நாற்பத்தி ஆறாயிரத்து முன்னூற்றி பத்து மட்டும்)

விவரிக்கப்பட்ட சொத்து அட்டவணைப்படி விற்பனைக்கு வைக்கப்படும். அசையும் பொருட்கள்/வீட்டு உபயோக பொருட்கள் உள்ளிட்ட உள்ளே உள்ள ஏதேனும் மற்றும் மேலே கூறப்பட்ட கடனீட்டு சொத்துக்கு உள்ளே இருப்பவை, ஏல விற்பனை அறிவிப்பில் குறிப்பாக குறிப்பிடாதவரையிலும் அவை கடனீட்டு சொத்துட